DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No.154/2024**

Deposition of Witness : PW 2 (2ம் மனுதாரர்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | அருண்குமார். | Father's Name | : | |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 03.02.2026

சாட்சி இன்று அழைக்கப்பட்டு Ms.S.Shanthi (Examiner) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை– தொடங்கப்பட்ட நேரம் : 11.57 மு.ப

நான் இந்த மனுவில் 2ம் மனுதாரர் ஆவேன். நான் இன்று நீதிமன்றத்தில் எனது எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவைகள் தான். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். **சான்றாவணங்கள் தாக்கல் இல்லை.**

**1,2 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்**

**3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்து வழக்கு சம்பந்தமாக நான்தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். விபத்தின்பொழுது நான் ஓட்டிச் சென்ற வாகனத்தின் உரிமையாளர் யார் என்றால் எனது தாய்மாமா சுரேஷ் ஆவார். விபத்து சமயத்தில் நான் காப்பீடு செய்யப்படாத வாகனத்தைதான் ஓட்டிச் சென்றேன் என்றால் சரியல்ல. விபத்தின்பொழுது நான் எனக்கு முன்னால் சென்ற வாகனத்தை பின்னால்தான் இடித்தேன் என்றால் சரிதான். முன்னால் சென்ற வாகனம் திடீரென்று வலதுபக்கமாக திரும்பியதால்தான் விபத்து ஏற்பட்டது. விபத்தானது எனக்கு முன்னால் சென்ற 2ம் எதிர்மனுதாரர் தவமணி கவனமாகவும் சாலை விதிகளை கடைபிடித்து ஓட்டி வந்தார் என்றும் நான்தான் சாலை விதிகளை கடைப்பிடிக்காமல் ஓட்டிச் சென்று அந்த வாகனத்தின் பின்னால்

இடித்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக புகார் கொடுத்துவிட்டு அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீடு எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. விபத்தானது எனது கவனக்குறைவினால் ஏற்பட்டுள்ளதால் 3ம் எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் வழங்க கடமைப்பட்டதல்ல என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 12.01 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N

Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2026.02.03 12:09:58 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 03.02.2026